RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt2427

OPEN ACCESS

# இறையன்பு படைப்புகளில் பெண்பதிவுகள்

ச. விஜயலட்சுமி [அ, *], எ. பச்சையப்பன் [அ]

[அ] தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை-17, தமிழ்நாடு, இந்தியா.

# Women in Iraianbu's works

S. Vijilakshmi [a, *], E. Pachaiyappan [a]

[a] Department of Tamil, Vels Institute of Science Technology and Advanced Studies, Chennai- 600117, Tamil Nadu, India

* Corresponding Author: vijilakshmiviji921@gmail.com

Received: 16-01-2024
Revised: 13-03-2024
Accepted: 20-03-2024
Published: 05-04-2024

Check for updates

**ABSTRACT**

Family is the basis of society and the economy plays a vital role in families. Not only man has the right and duty to take care of his family, but also the woman. In his song, Bharati has said about how women were considered as obstacles in socio-economic conditions and how women were treated as slaves. Personality is all about balancing emotion, knowledge, ability and managing the problems based on time, place and situation. The purpose of this article is to examine the feminist ideas in the works of Iraianbu in the categories of conservative family-oriented feminism, spiritual feminism, domestic feminism, non-leadership feminism, social feminism, Dalit feminism, progressive feminism, ecofeminism, revolutionary feminism, moderate feminism, western feminism, and Indian feminism.

**Keywords:** Iraianbu, Families, Women, Feminism

## முன்னுரை

பழமைவாதக் குடும்பம் சார்ந்த பெண்ணியம், ஆன்மீகப் பெண்ணியம், இல்லறபெண்ணியம், தலைமைத்துவம் வேண்டாப் பெண்ணியம், சமூகப் பெண்ணியம், தலித்யபெண்ணியம், முற்போக்குப் பெண்ணியம், சூழல்பெண்ணியம், பயங்கரபுரட்சிப் பெண்ணியம், மிதவாதப் பெண்ணியம், மேலைநாட்டுப் பெண்ணியம், இந்தியபெண்ணியம் என்ற இந்தவகைகளில் இறையன்புவின் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகளைக் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## உளவியல்

“கிஷோர் வார்த்தையை அளந்துபேசு அப்பாகிட்டையாவது மரியாதையா நடந்துக்குசரளா படபடத்தால் நின்னினும் நல்லகேட்ட தாய் தன்பிள்ளையை நல்லகுணம் நிறைந்தவனாகவளர்க்க பாடுபடுகிறாள், குழந்தைகளின் உள்ள உணர்வுகளை புரிந்து கொள்ளவேண்டும்; ஒவ்வொருபை சாவையும் நாம் எவ்வளவு கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறோம்னுப சங்களுக்கு புரியனுங்க அப்பதான் நம்மளோட அருமை அவர்களுக்கு தெரியும்” என்றவாறு நின்னினும் நல்லன் என்று பிள்ளைகளுக்கு புரியவைக்கமயக்கம் என்றகதையில் சரளா என்ற பெண்பாத்திரத்தின் வழி, பெருமைகொள்ளவைக்கிறார். (வெ.இறையன்பு, மயக்கம், ப.32)

## பொருளாதாரச் சிந்தனையில் பெண்

சமூகத்தின் அடிப்படையே குடும்பம் தான். குடும்பத்தின் அடிப்படைபொருளாதாரம். தன் குடும்பத்தைப் பார்த்துக்கொள்ளும் உரிமையும் கடமையும் ஆணுக்கு மட்டுமல்ல, பெண்ணுக்கும் உண்டு. சமூகப்பொருளாதார நிலைகளில் பெண்களின் தடைக்கற்களாகக் கருதினர் என்பதையும் பெண்களின் வாழ்க்கை அடிமைத்தன்மை உடையதாக இருக்கும்நிலையையும் பாரதி தன் பாடலில் கூறியுள்ளார். "மனம் என்னும் பெண்ணை வாலி நீகேளாய் நின்னோடு வாழுநெறியும் நன்கருத்திடேன்" இப்பதிவை இறையன்பு அவர்கள், “கைமுறிக்கிறார்” என்னும் சிறுகதையில் குடும்பத்தைப் பாதுகாக்கவும் தன் குழந்தைகளைக் குறையின்றி வளர்க்கவும் முழுக்க வியாபாரம் செய்வதைப் பலபெண்களுக்கு முன்னுதாரணமாகப் பொன்னம்மா என்னும் காதாபாத்திரத்தைப் படைத்துள்ளார் இறையன்பு (கைமுறிக்கிறார், ப.24).

## ஆளுமை

உணர்வு அறிவு, ஆற்றல் ஆகியவற்றைக் கட்டமைத்துக் கொள்ளுவதும் இடம், காலம், சூழல்விளைவு ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு திறமையாகக் கையாளுகின்ற நிலையே ஆளுமை ஆகும்.

பெண் என்பவள் இல்லறம் தொடங்கி அலுவலகம் வரை அனைத்து இடங்களிலும் தன் இருப்பை நிலை நிறுத்திக் கொள்ள முயற்சிப்பவளாக உள்ளாள் என்பதனை, "அவளைப்பார்க்கும் போதே அலுவலகம் உற்சாகப்படும், தொற்றுக்கொள்ளும் புன்னகையுடன் அவள் நடந்து போகையில் பலரையும் உற்சாகம் பற்றிக் கொள்ளும்" என்று அபர்ணா என்ற கதாபாத்திரம் வழி கூறியுள்ளார். (வெ.இறையன்பு, கைமுறிக்கிறார், ப.36).

## வரதட்சணைக் கொடுமை

வரதட்சணைக் கொடுமை தலைவிரித்து ஆடுகின்ற இக்காலத்தில் இன்னும் பலகொடியினர் தன் பண்பாடு மாறாமல் வாழுகின்ற நிலையை ஆத்தங்கரை ஓரம் என்னும் நாவலில், “தனக்கு மிகவும் இளைய நண்பனுக்கு வைபோகங்கள் நடந்தேறியும், திருமணத்தில் வரதட்சணை கொடுத்துப் பெண்ணைக் கொடுக்கும் நாகரிகமான கலாச்சாரம் இல்லாமல், மணமகன் வீட்டார் பெண்ணை எடுப்பதற்குப் பதிலாகப் பெண்ணுக்கு 20 வெள்ளாடுகளையும் 10 மூட்டை மக்காச்சோளத்தையும் கொடுத்துவிட்டு பெண் எடுத்துக்கொண்டனர்” எனத்தனது நாவலில் பதிவுசெய்துள்ளார் வெ.இறையன்பு.

## உழைப்புசுரண்டல்

இறையன்பு எழுதிய கவிதையில் பெண்ணுரிமை சிக்கல்கள், பெண்களுக்கு ஏற்படும் தொல்லைகள், இடர்பாடுகள் போன்றவற்றை அவர்சிந்தித்துப் பெண்களின் உணர்வுகளுக்கு வடிவம் தந்துள்ளார்.

"உங்கள்

கைகளில்இருந்தவிலங்கு

கால்களுக்கு

மாற்றப்பட்டிருக்கிறது

வேலைக்குபோவது

சலுகையாகஇருக்கும்என

சந்தோஷம்அடைந்தீர்கள்

ஆனால்

சுமையாகமாறி

தொல்லைப்படுத்துகிறது

வீட்டுவேலைகளோடு

இன்னொருபளு

இணைந்துகொண்டது

நாள்முழுதும்

உழைக்கும்பெண்களுக்கு

தாய்மைகூட

வரமாகவருவதில்லை

தண்டனையாகத்தான்

தரப்படுகிறது.

மேடையிலேஏறிபெண்ணுரிமைபற்றிபேசிவிட்டு

துணைக்குதுணைவன்வரும்வரை

கூட்டம்முடிந்தகும்

காத்திருக்கத்தானேசெய்கிறீர்கள்" (பூபாளத்திற்கொருபுல்லாங்குழல், பக்.103)

என்று பெண்களின் தன்னல மற்றப் பண்பினைத் தெளிவுபடுத்துகிறார். மேலும், பெண்கள் எவ்வாறெல்லாம் அடிமைப் படுத்தப்படுகிறார்கள் என்பதையும், பெண் என்பவள் பிள்ளையைப் பெற்றுத்தரவும் வேலைகளைச் செய்யவும் மட்டுமே படைக்கப்பட்டவளாகவே இன்றும் பல்வேறு குடும்பங்களில் கருப்படுகிறார்கள் என்பதையும் வெளிப்படுத்துகிறார்.

"பெண்ணின்

உடலில்

ஐ.எஸ்.ஐமுத்திரைஇருக்கிறதா

என்பதுதவிரஅனைத்தும்ஆராயப்பட்டது. (பூபாளத்திற்கொருபுல்லாங்குழல், ப.104)

என்ற கவிதையின் மூலம் பெண்களின் மனஉணர்வுகளை இறையன்பு வெளிப்படுத்தியுள்ளார். பெண்கள் பலர் தாங்கள் அடிமையாக உள்ளதையே உணராமல் இருக்கின்றார்கள். பெண் என்பவள் தனிமனிதன், குடும்பம், சமூகம் என்ற அனைத்துநிலைகளிலும் அடிமையாக உள்ளாள்.

## ஆடை

இச்சமூகத்தில் பெண்என்பவள் ஆடையைக் கூட தன் விருப்பத்திற்கு அணியமுடியாத அவலம் இன்றுவரை உள்ளது.

"புடவைகட்டுவது மட்டுமே

புனிதம்என

போதைப் பொருள்களாகிய

புராணக்கதையது
விருப்பப்படும் நேரத்தில்
மட்டுமே
தன்னை
விற்றுக்கொள்பவள்
விலைமகள்
விரும்பாத நேரத்திலும்
கணவனுக்காகத் தன்னை
விட்டுக்கொடுப்பவள்
குலமகள்.
முதலாளி ஒருவரிடம்
அடிமையாய் நடந்து
கொள்பவனும்
அதிகாரம் செலுத்த
ஒரு அடிமைஉண்டு
அதுதான் அவன்மனைவி
சின்னவயதில் இருந்தே
சாப்பாட்டோடு உங்களுக்குப்
பொறுமைக் குணமும் போதிக்கப்பட்டதால்
உங்களை அடிமைப்படுத்தும் ஆலுகைகள்
உங்களுக்கு அக்கிரமமாய்ப் படவில்லை" (பூபாளத்திற்கொருபுல்லாங்குழல், ப.107)

என்று பெண்களின் தற்காலநிலையும் கூறுகிறார்.

"பூக்களிலேநானும்ஒரு
பூவாய்த்தான்பிறப்பெடுத்தேன்
பூவாகப்பிறந்தாலும்
பொன்விரல்கள்தீண்டலையே,
பொன்விரல்கள்தீண்டலையே,
நான்பூமாலைஆகலையே"
"உதிர்வதற்குமுன்னாலேயே
கழுத்துக்கள்
துண்டிக்கப்பட்டு
மலர்வளையத்திற்கும்
மலர்களே" (பூபாளத்திற்கொருபுல்லாங்குழல், ப.110)

பெண் என்பவள் வேலைப் பார்ப்பதினாலோ அல்லது திருமணம் செய்து கொள்வதற்கான பொருளாதார வசதி இன்மையினாலோ துன்பப்படுகிறாள். பெண்கள் தன் வாழ்க்கையைத் தனியாக வாழும் நிலைக்குத் தள்ளப்படுகிறாள். மேற்கண்ட கவிதையின் வழி பெண்ணின் மனஉணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளளார்.

## முடிவுரை

இச்சமூகத்தில் பெண் என்பவள் முக்கிய இடம்பெற்று வாழ்பவள். பெண்கள் உயர்வாகவும், சமஉரிமையுடனும் மதிக்கப்பட வேண்டும் என்றும், பெண்கள் அதிக சமூக அக்கறை கொண்டவர்கள், குடும்ப உறவுகளைப் பேணிக்காத்து சமுதாய வளர்ச்சிக்குத் துணையாக நிற்பவர்கள் என்பதையும் வெ.இறையன்பு படைப்புகள் வெளிப்படுத்தியுள்ளன.

## References

இறையன்பு, வெ. (2016) பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், நியூசெஞ்சுரி புக்ஹஸ், சென்னை.

இறையன்பு, வெ. (2016) ஆத்தங்கரை ஓரம், நியூசெஞ்சுரிபுக்ஹஸ், சென்னை.

இறையன்பு, வெ. (2017) தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள், நியூசெஞ்சுரிபுக்ஹஸ், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License